**O.S No. 189/2014 PW3 - அன்புசெழியன்,**

த/பெ.போடி ஒச்சாத்தேவர் தேதி : 30.08.2024

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :

தாவா சொத்து கல்லூாத்து கிராமத்தில் உள்ளது. வழக்கு தாக்கல் செய்தது செல்லமுத்து. வீட்டிற்காக வழக்கு தாக்கல் செய்து. தாவா சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம், நான்கு மால் தெரியாது. தாவா சொத்து மகாலிங்கபுரம் கிராமத்தில் உள்ளது. நான் குடியிருப்பது நல்லொச்சாம்பட்டி கிராமம் ஆகும், செல்லமுத்து உள்ளூரில் தான் திருமணம் செய்து கொடுத்தார்கள். அவர் கணவர் இறந்துவிட்டார். வாதிக்கு ரோட்டிற்கு தெற்கே வீடு உள்ளது என்றால் தற்போது வாங்கி உள்ளார். அந்த வீட்டில் செல்லமுத்து குடியிருந்து வருகிறார் என்றால் அவரும் , அவர் மகனும் இருக்கிறார்கள். அவர் மகன் மிலிட்டரில் இருக்கிறார். தற்போது அந்த வீட்டில் வாதி மட்டும் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். வாதி எனக்கு எப்படி பழக்கம் என்றால் அவர் எனது தோட்டத்திற்கு வேலைக்கு வருவார் அதன்மூலம் எனக்கு வாதி பழக்கமாகும். அந்த பழக்கத்தின் அடிப்படையில் என்னை சாட்சி சொல்ல கூப்பிட்டார் என்றால் சரிதான். இதை போல் எத்தனை வழக்கில் சாட்சிமளித்துள்ளேன் என்றால் வேறு சாட்சி எதுவும் சொல்லவில்லை ஆனால் ஜாமீன் போய்உள்ளேன். இந்த வழக்கில் பணம் வாங்கி கொண்டு பொய்யாக சாட்சிமளிக்கிறேன் என்றால் சரியல்ல. செல்லமுத்துடன் உடன் பிறந்தவர் சித்தர்மலை, காளிமுத்து, மற்றொரு சகோதர் உண்டு. 1ம் பிரதிவாதி முத்துசெல்வம் காளிமுத்துவின் மகன் ஆவார். செல்லமுத்துவின் அப்பா பெயர் மகாலிங்க கவுண்டர். தாவா சொத்து மகாலிங்க கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்தா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவர் இறந்த பிறகு அவர் மகன் மூன்று பேரும் தான் வழககு சொத்தை அனுபவம் செய்து வந்தார் என்றால் அது எனக்கு தெரியாது வாதி அனுபவம் செய்து வந்தார்.

2. ஆண் மக்களுக்குள் ஏற்பட்ட பாகப்பிரிவினையில் காளிமுதது பாகத்திற்கு தாவா சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. தாவா சொத்திற்கு காளிமுத்துவின் பெயரில் பட்டா இருந்தது என்றால் வாதி பெயரில் தான் பட்டா இருந்தது. தற்போது அதில் வீடும், கொட்டமும் உள்ளது. காளிமுத்து இறந்துவிட்டார். தாவா சொத்தில் தற்போது காளிமுத்து மகன் 1ம் பிரதிவாதி முத்துசெல்வம் தான் குடியிருந்து வருகிறார் என்றால்சரியல்ல. தாவா சொத்திற்கும் வாதிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், மோசடியாக பட்டா மாற்றி உள்ளார் என்றும்

சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் மகாலிங்கபுரத்தில் தான் குடியிருக்கிறார்கள். தாவா சொத்து புஞ்சை நிலத்திலிருந்து நத்தமாக மாறி உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. போட்டதாக சொல்லும் ரசீது தாவா சொத்திற்கானது இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு தான் தாவா சொத்து உரிமையானது என்றும் அவர்தான் அனுபவம் செய்து வருகிறார் என்றும் வாதிக்கு எந்த உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. வாதி கேட்டு கொண்டதன் பேரில் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S.d./Anbucheliyan
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.